விலை: ரூபா 2-50

# சுமங்கலி

ஈழத்தமிழ் மாதர் பத்திரிகை

முகம்: 1 30 ஆகஸ்ட் 1986 திலகம்: 1

நீங்கள் வசிக்குமிடம் எதுவானாலும், இன்றைய
பாதுகாப்பற்ற நிலைமையில், அமைதியான சூழ்நிலையில்
உங்களுக்கென ஓர் உதயம்

ஹியூமன் ரஸ்ட்

உங்கள் அன்பு நெஞ்சங்களுடன் பேச வேண்டுமா?
தரமான தொலைபேசி சேவையை நாடுங்கள்.
சுத்தமான அலைவரிசையில் செய்திகளைப் பரிமாறிக்கொள்ள
நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இடம்:
ஹியூமன் ரஸ்ட் (HUMAN TRUST)
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

# வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர்க் கந்தன் ஆலயம்

## தமிழ் மணக்க நீ வாழ்க!

-- துர்க்கா



சுந்தரம் பெண் ஒளியே
சுமங்கலியே சுடர்விளக்கே!
செந்தமிழில் கலை வடிக்கும்
சித்திரமே. செம்பாவாய்!
சத்தியத்தின் குரல் எடுத்து
தர்மநிலை காப்பதற்குத்
தனிமகளாய் வந்தவளே!
தரணியிலே உன்புகழ்
வாழ்க!

## கந்தன் ஆலயம்

செ. சக்திதரன்
(கலைப்பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

பழம்பெரும் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய பெருமை நல்லை நகருக்குண்டு சைவத்தின் காவலரான ஆறுமுகநாவலரை அகிலத்திற்களித்ததும் அப்பதியே. அத்தகைய பெரும்பதியிலே உறைந்திருந்து அருளாட்சி செய்கின்ற கந்தனின் ஆலயம் அருட்தன்மை செறிந்தது மட்டுமன்றி வரலாற்று முக்கியத்துவமுங் கொண்டது. யாழ்ப்பாண வரலாற்றின் மையக்கல்லான நல்லூர்க் கந்தன் ஆலயம் அமைந்துள்ளதென்றால் மிகையாகாது. முடிமன்னர் அமைத்து வழிபட்ட அத்தலம் அந்நியராட்சியில் அழிவுற்ற போதிலும் அடியார்கள் அயர்ந்து விடவில்லை. முருகனும் அவர்களை அல்லலுறவிடவில்லை ஆலயம் மீண்டும் தோன்ற அண்ணல் அதிலிருந்து அருளாட்சி செய்கின்றான்.

ஆசிய நாடுகளின் வரலாற்றைப் பொதுவாக நோக்குமிடத்துப் பெரும்பாலான நாடுகளில் "மதம்" அரசியலோடு தொடர்பு பட்டதாக விளங்கி வந்துள்ளமையை அறியலாம். இலங்கையிலும் இவ்வாறே அன்று தொட்டு இன்று வரையில் மதமானது அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. பண்டைய இலங்கையில் சிவனை வழிடும் சமயம் பதவியிலிருந்தது என்பதற்கு மகாவம்சமும் தேவாரத் திருமுறைகளும் சான்றுகின்றன,

கி. பி. பதினோராம் நூற்றுண்டில் இலங்கை சோழநாட்டுக்குட் பட்டது. சோழ மன்னர்கள் சைவத்தை ஆதரித்தனர். ஆலயங்கள் பல இலங்கையிலும் இந்தியாவிலும் கட்டப்பட்டன. "வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் ஆலயம்" இவர்கள் காலத்திலேயே கட்டப்பட்டதென வரலாறுரைகள் கூறுகின்றனர். பன்னிரண்டாம் நூற்றுண்டின் மத்தியில் இலங்கை முழுவதும் மகா பராக்கிரமபாகு என்னும் சிங்கள மன்னனின் ஆதிக்கத்திற்குட்பட்டது.

கி. பி, 1410 ம் ஆண்டில் குணவீரசிங்கை ஆரியன் என்பான் வட இலங்கையில் மன்னனுனன். சிங்கை நகரை (தற்போது வல்லிபுரம் என வழங்கிவரும் பதி) தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த இவன் சைவத்திற்கும், தமிழுக்கும் அரும்பணியாற்றினுன் இராமேசுவரக் கர்ப்பக்கிருகத்தை இவனே கட்டுவித்ததாக கூறப்படுகின்றது. குணவீர ஆரியனின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பொருட்டு ஆரும் பராக்கிரமபாகு தன் சேனுபதியாகிய ஷண்பகப்பெருமாளை அனுப்பினுன். இப்படையெடுப்பில் குணவீரன் தோல்வியுற யாழ்ப்பாண இராச்சியம் ஷண்பகப்பெருமாளின் வசமாயிற்று

பராக்கிரமபாகுவின் சம்மதத்துடன் ஷண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தில் மன்னனுனன் சிங்கை நகர் யுத்தத்திற் பாழாகியதால் கி. பி. 1450ல் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு இவனது ஆட்சி தொடங்கியது. "ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு" என்னும் நாமத்தோடு இவன் பதினேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. இம் மன்னனே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தான். ஆலயக் கட்டிடத்தில் "சூரியகுல வம்சோத்பவ ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு" என இன்றும் இவன் போற்றப்படுகிறுன்.

1467ல் ஆரும் பராக்கிரமபாகு காலமானதைத் தொடர்ந்து புவனேகபாகு யாழ்ப்பாணத்தை விட்டுத் தென்னிலங்கை சென்று "கோட்டையில்" இராசதானியை அமைத்தான். ஆரும புவனேகபாகு எனும் நாமத்தோடு அவனாட்சி அங்கு தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தையாள விஜயபாகு என்பான் புவனேகபாகு மன்னனுக நியமிக்கப்பட்டான்

இந்நிலையில் முன்னர் கோற்றுத் தாய்நாடு திரும்பியிருந்த கனகசூரியன் மீண்டும் சேனையுடன் வந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைபபற்றினுன். நல்லூரைத் தலைநகராகக் கொண்டே இவனது ஆட்சியும் வளர்ந்தது.

கி. பி. 1475ல் கனகசூரியனுக்குப் பின் அவன் மைந்தனை சிங்கைப் பரராசசேகரன் அரியணையேறினுன். ஆட்சித்துறையில் தந்தையிலும் சிறந்தவனுக இவன் விளங்கினுன். இவனது ஆட்சிக் காலத்தில் நல்லூர் கந்தனுலயம் சிறப்புற்று விளங்கியது. இராசதானியாகிய நல்லூர் நகரத்திற்கு நாற்புறத்திலும் இவன் ஆலயங்களமைத்தான். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை மையமாக வைத்தே நல்லைநகர் உருவாக்கப்பட்டது; நகருக்கு வடக்கே சட்டநாதர் கோவிலும், கிழக்கே வெயிலுகந்த விநாயகர் கோவிலும் தெற்கே கைலாசநாதர் கோவிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவிலும் அமைக்கப்பட்டன. பிற்காலத்தில் போர்களின் போது வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலிலிருந்து மன்னர்கள் படை நடத்திச் சென்றதாக வரலாறுகள் கூறுகின்றன கந்தனுலயத்திற்கருகில் ஓர் ஏரியமைத்து யமுனை நதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடியிற் கொண்டு வந்து ஏரியிற் சேர்ப்பித்தான் இவ்ஏரி "யமுனுரி" எனப் பெயர் பெற்றது. நல்லூரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கருகிலுள்ள பகரவடிவினதான ஏரியே இது எனக் கூறபபடுகின்றது

தொடரும்

## சுமங்கலியின் குங்குமப்பொட்டு பற்றி

### ஒரு சுவையான தகவல்

தமிழ்ப்பெண்கள், அதுவும் குறிப்பாக சுமங்கலிகள் நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்ளும் பழக்கம் எப்படி ஏற்பட்டது. ஆதியில் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த பெண்கள், வயதுக்கு வந்ததும் பிள்ளை பெறத் தயாராகி விட்ட அந்த நிலையை அறிவிக்கும் ஓர் அடையாளச் சின்னமாகப் புருவ மையத்தில், சிறிய செந்நிறப் பொட்டை இட்டு வந்தார்கள். அதுவே காலப்போக்கில் மாறி, சுமங்கலியின் ஒரு மங்களச் சின்னமாக, அழகு தந்து வருகிறது, இப்போது கல்யாணமானவர் ஆகாதவர் என்ற பேதமின்றி எல்லோருமே குங்குமம் வைத்துக் கொள்வதால் சுமங்கலி தன்னை இன்னொரு வழியில் சிறப்பித்துக் காட்ட உச்சி வகிட்டில்,, நெற்றிக்கு மேலே இன்னொரு பொட்டு வைத்துக் கொள்ளும் பழக்கமும் இருந்து வருகிறது.

o o o

## நித்திய கண்டமும் மீட்சி விமோசனமும்

வாழ்வையே நம்ப முடியாமல் ஓர் உறுத்தல், இடைநிலைகனவாக இருந்து வருகிறது இப்போது இன்றுள்ள நிலையில் இருக்கிற காலமே மெய் எதிர்காலமே சூனியமாய் சறுக்கு மரமாய் ஏறஏறச் சறுக்கிப் போகிற, நமது விதிபயணம் பாதி வழியிலே, வாழ்வு நிறைவு பெறுமல் நின்று முடிந்துவிடவும் கூடும். நாம் அப்படி நம்பிக்கையற்றவர்களாய் விட்டோம் நம்மை இந்த நிலையிலிருந்து - நித்திய கண்டத்திலிருந்து- காப்பாற்றயாரால் முடியும். மீட்சி விமோசனம் யாரால் வரும். இந்த நிறைந்த இருள் கண்டத்திலிருந்து அது வரமுடியுமானுல் என்றோ கதிமோட்சம் தானுகக் கிடைத்திருக்கும் ஆனுல் ஏன் கிடைக்கவில்லை,

நமது பாவங்களின் பலன் அப்படி - இவை எரிந்து முடிந்து போகும தறுவாயில் - புடமிட்ட பொன் கோலமாக அந்தக் காயப்பிழம்பு தானே தோன்றி நமைக் காக்கும். இது காலத்தை மறைத்த இருளின் மேலாக எழுந்து எழுச்சி ஒளி மிக்க ஒரு கதிரின கடவுளின் ஆன்ம தரிசனத் துணையாகவே நமக்குக் கிட்டும். அதைப் பெற வேண்டுமென்பதே - இப்போதுள்ள பிரார்த்தனை.

# சுமங்கலி

இன்று நம்மிடையே பத்திரிகைகளுக்குக் குறைவில்லை. இவற்றில் செய்திப் பத்திரிகைகளே முதல் இடம் வகிக்கின்றன. மக்களும் செய்திகளை அறிவதிலேயே அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். எனினும் வெறும் செய்திகளால் நம்முடைய சிந்தனை சரியான பாதையில் வளர்ச்சி பெறுமா என்பது சந்தேகத்துக்குரிய விடயமே. நாம் பெருமை பெறுவது இந்தச் சிந்தனை ஒன்றினால்தான். இது இல்லாவிட்டால் மனிதன் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை. நல்லவழியில் சிந்திக்கும் சக்தி இல்லாது போனால், நமது வாழ்க்கையே குழப்பம் மிகுந்த ஒன்றாகிவிடும்.

குழம்பி வாழ்வதைவிட தெளிவுபெற்று வாழ்வதே மோனநிலை - இது நமக்கு அமைதியைத் தருகிறது. மனம் வளர - சிந்தனைக் கூர்மையே மிக அவசியம். தீர்க்கமான சிந்தனை ஞானத்தின் மூலமே, நாம் வாழ்வு நிலையின் இறுதியில் பலனைப்பெறுகிறோம். ஆகவே வெறும் செய்திகளோடு மட்டும் நின்றுவிடாமல் நமது மனம், சிந்தனைகளால் பெருமை பெற்று வளர்வதற்கு, அதைத் தரக்கூடிய விதத்தில் நமது பத்திரிகைகள் சரியான பாதையில் களம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

சுமங்கலியைப் பொறுத்தவரை - இந்தப்பணி ஓர் உண்மைக் கலைத் தொண்டாகச் சரியான வழியில் நிறைவேற்றி வைப்பதற்கு - நமது பத்திரிகை புதிதாகக் கண் திறந்துள்ளது. இதில் வெறும் இலாப நட்டக் கணக்கை மட்டும் கருதி உழைப்பதை மறந்துவிட்டு, கலைப்புனிதங்களினால் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆத்மசத்தியத்தின் உடன்பாடாகவே சுமங்கலியின் மங்கள முகம் ஒரு தெய்வ தரிசனமாக வெளிப்பட்டிருக்கிறது. சத்தியத்தின் அழகைக் காண்பதே உண்மையான கலை என்று காந்தியடிகள் சொன்னார்கள், இலக்கியம் இதற்கு விதிவிலக்கல்ல. சத்தியதின் அழகைக் காணாது எந்தவொரு இலக்கியப்படைப்பும் எடுபடாது. அது சூனியமாகவே நிற்கும். இதைவிட இலக்கிய சத்தியமே தமிழின் பெருமையல்லவா!

சுமங்கலியைப் பொறுத்தவரை வெளிமுகத்தில் வரைந்து காட்டும் செய்திக் கதிரினூடாகவே, அதன் உண்மை முகம் தெரியவரும் செய்தியை செய்திகளை மறுப்பதற்கில்லை. காலம் நம்மை விழுங்கி வருகிறது. இது துயரம் நிறைந்த கனவல்லவா; இந்தக் கனவினூடே வாழ்க்கையைக் கண்டு தெளிவதற்கு அறிவின் சத்தியம் ஒன்றே துணை. அறிவின் சத்திய ஒளி, கலை இலக்கிய வாயிலாகவே வெளிப்பட்டு வருகிறது. இது இல்லாமல் வருகிற எழுத்தாற்றலால் பலனில்லை. ஆற்றல் என்பது வேறு, ஞானம்வேறு.

இது தானகவே புடம் கொண்டுதோன்றும், அறிவின் விசால ஒளியான ஆன்மீக ஞானம்.

மனித நேயத்தை வளர்க்கும் பொருட்டு சுமங்கலியானது உள்முகத்தின ஆன்மீக சத்தியத்தை-அவள் அறிவை நீங்கள் நம்பிஏற்றுக்கொண்டு, மேன்மை பெறவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். இதுவே பிரார்த்தனை

இதை வெளியிட நினைத்தபோது எத்தனையோ தடைகள் வந்தன, எதிர்மறையான கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. பொருளாதார பின்னணி பலம் குறித்தும் ஆசிரிய நிலை குறித்தும் மனதைக் குழப்புவது போன்ற கேள்விகள் எழுந்தன.

இவற்றையெல்லாம்சமாளித்து, வெற்றி கண்டு சுமங்கலியை தமிழ்மணம் குறையாத, இலக்கியப் பத்திரிகையாக வெளியிடுவதில் நாங்கள் அடைந்த சிரமங்களே அதன் வெற்றி வாசலுக்கு ஒரு படிக்கல்லாக, நின்று உதவி வரும். இது ஒரு சகாப்தம் கண்ட மைல் கல்லாக எங்களை வழி நடத்தும் இந்த நம்பிக்கையுடன் சுமங்கலியை கொள்கை மாறாத ஓர் இலக்கியப் பத்திரிகையாகவே ளியிடுவதில் பெருமை யடைகிறோம்,

நன்றி

# பேட்டி

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

சமய வாழ்வுக்கென தம்மை முழுவதும் அர்ப்பணித்து, நிறைபுகழ் கண்ட பெருமைக்குரிய சிவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பேட்டி காண்பதென்பது இலகுவான காரியமல்ல, பாரிய பொறுப்புக்களைச் சுமக்கும் அவருக்கு ஓய்வே கிடையாது. எத்தனையோ வேலைகளுக்கு நடுவிலும் அவர் சுமங்கலிக்காகப் பேட்டி தர இசைந்தது தமிழ் செய்த புண்ணியமே.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை பேட்டி காண்பதற்காகத் ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்திற்குப் போயிருந்தேன். தியானமண்டபத்துக் காரியாலய வராந்தாவில், அவர் மிகுந்த அன்போடு என்னை வரவேற்றார். இந்த அன்பு அருள் வெள்ளம் எனக்குப் புதிது. அத்தகைய பெருந்தலைவருடன் நான் நிழல் போல அமர்ந்திருப்பதாகவே உணர்ந்தேன். அவரை நிமிர்ந்து பார்க்கவிடாமல் ஒரு திரை எனக்கும் அவருக்குமிடையே; நான் நிழல். ஒளிகாந்தியும், ஒளி வீசும் முகமுமாக அவரின் கம்பீரமான குறைவில்லாத அருள் நிறைந்த முகத்தின் குறைவில்லா நிறைந்த புன்னகை இருளிடையே தோன்றும் ஒளிவிளக்காகவே எனக்குப் பட்டது. நிமிர்ந்து அவரை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே! வணக்கம் அம்மா என்றேன்.

வணக்கம்

கே:- நான் சுமங்கலிப் பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறேன் தங்களைப் பேட்டி கண்டு எங்கள் சுமங்கலிப் பத்திரிகை வாசகர்களுக்காக எழுதப் போகிறேன்.

பதில்:-ஓ! தாராளமாக எழுதுங்களேன். அம்மன் அருள். ஆமாம்——.— என்ன? இந்தப் பத்திரிகை புதிய வெளியீடோ? நல்ல காரியம்

கே:- ஆம்
நன்றி இப்போது நான் கேள்விகளைக் கேட்கட்டுமா?

பதில்:-ஆம் தாராளமாக!

கே:- சைவ உலகம் தங்களை நன்கு அறியும். தன்னலமற்ற சமயப்பணி மூலம் உங்கள் புகழ் உலகெலாம் பரவியிருக்கிறது. இப்படிச் சமயத் தொண்டு புரிந்து இறையுணர்வை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் தங்களுக்கு எப்பொழுது ஏற்பட்டது?

பதில்:-எனக்குச் சிறுவயதிலிருந்தே பக்தி அதிகம் ஏனென்றால் நான் வளர்ந்த சூழ்நிலை, நான் படித்த கல்லூரி, இராமநாதன் கல்லூரியிலே தான் நான் ஆரம்பத்திலே படித்தேன். அங்கு நல்ல சமயச் சூழ்நிலை சமய ஒழுக்கம், கட்டுப்பாடு பக்தியிலே மனம் வளர வேறு என்ன வேண்டும்? மேலும் பல சைவப் பெரியோர்களின் தொடர்பு குறிப்பாகத் தமிழகத்திலுள்ள சைவசமயம் வளர்க்கும் பீடங்களாக விளங்கும் தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனர்களோடு எனக்கு இளமையிலிருந்தே ஏற்பட்ட தொடர்புகள், இதைவிட என்னுடைய சமய உணர்வு இலட்சியம் வளரக் காரணமென்று சொல்லலாம்.

கே:- ஒரு புகழ் பெற்ற ஆலயத்தின் ஆதீனகர்த்தாவாகத் தாங்கள் இருந்து வருகிறீர்கள். இந்தத் துர்க்காதேவி அம்பாள் ஆலயத்தைப் பற்றி உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாம் என்று நினைக்கிறேன். தாங்கள் தலைமை ஏற்ற பின்புதான் இந்த ஆலயத்துக்குப் புகழ் வந்ததாகச் சைவமக்கள் பலரும் கருதுகிறார்கள் இது உண்மையா?

பதில்:-அதெப்படிச் சொல்வது என்றால்தான் அம்மனுக்குப் புகழ் பெயர் வந்தது என்று சொல்வது மிகையான வார்த்தை அவருக்குப் புகழ் தேடிக்கொடுக்க நான் யார்? எனக்கு அவரின் புகழைப் பேசுகிற தகுதி மட்டும் தான் உண்டு. என்னுடைய நாவன்மையாலே நான் சென்றவிடமெல்லாம் அம்மன் புகழைப் பேசி வந்திருக்கிறேன். வேண்டுமானால் அம்மனின் புகழுக்கு என்னுடைய என்னுடைய பேச்சுவன்மை, ஒரு காரணம் என்று மட்டும் சொல்லலாம். இப்படிச் சொல்வதுகூட என்னுடைய பொறுப்பைக் கூட்டுவதாகவே இருக்கிறது. எனக்குப் பாரமாக இருக்கிறது. அதற்கு ஏற்றதாக இந்தப் பணி நான் சரிவர நிறைவேற்றவேண்டுமே!

கே:- ஆதி தொடக்கம் இவ் ஆலயம் உங்கள் பரம்பரைப் பரிபாலனத்தின் கீழ் இருந்ததா? அல்லது வேறொருவருடைய பொறுப்பில்இருந்ததா? அதைச் சற்று விளக்கமாகக்கூறமுடியுமா?

பதில்:-ஆதியிலே இது தனி ஒருவரின் கையிலேயே தான் இருந்தது. பின் இந்தப் பெர்றுப்பு அறங்காவலர் சபையினரால் கையேற்கப் பட்டு நடத்த முடியாமலே எங்கள் நிருவாகத்தின் கீழ் வந்து அப்போது நான் அதில் ஓர் அங்கத்தவராக மட்டுமே இருந்தேன்.

கே:- அதன்பின்பு ஆலயத்தின் வளர்ச்சி பற்றி, அதாவது தாங்கள் தலைமை ஏற்று நடத்த முன்பு இருந்த நிலைமைக்கும், தற்போதய நிலைமைக்கும், உள்ள வேறுபாடுகள் என்ன?

பேட்டி கண்டவர்:

## ஏழாலையூர் ரம்யா கந்தையா

பதில்:-சுமார் 150 வருடங்களுக்கு முன்பு இந்த ஆலயம் நல்ல நிலைமையிலே தான் இருந்தது இடையே அது முற்றாக இடிந்து போய் விட்டது. நாங்கள் பொறுப்பேற்ற பின்னர்தான் படிப்படியாக இது புனரமைக்கப் பட்டு இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறது

கே:- இவ் ஆலயத்தை பொறுப்பேற்ற பொழுது தங்களுக்குஅப் பொழுது இருந்த மனநிலை எவ்வாறு இருந்தது.

பதில்:-அம்மனை வழிபாடு செய்யவேண்டுமென்கிற ஆர்வம் மட்டும் தான் அப்பொழுது இருந்தது. அப்பொழுதெல்லாம் எனக்கு அதைத்தவிர, வேறு நினைவு இருந்ததில்லை. அப்படி நிறையக் கும்பிடுவதே என்னுடைய அப்போதைய மனநிலையாக இருந்தது

கே:- நீங்கள் கோயில் தொண்டு செய்வதோடு நில்லாமல் சமயத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதன் காரணம் என்ன? தங்கள் சமயப்பணி பற்றி சற்று விபரமாகத் தந்தால் நன்றாகவிருக்கும்.

பதில்:-நான் இராமநாதன் கல்லூரி மாணவியாக இருந்த காலத்தில், மற்றவர்கள் குறிப்பாக எனது ஆசிரியர்கள் பெரியார்கள் எனக்குத் தந்த ஊக்குவிப்பினாலும் பேச்சாற்றல் இருந்த காரணத்தினாலும் எனக்குச் சமயத்தை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது

( தொடரும் )

# ஈழத்து எழுத்துலகில் . . .

கலா கௌரிகாந்தன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கு இணங்க இந்த வையகத்திலே எத்தனையோ பேர் புகழொடு தோன்றி இருக்கிறார்கள். தோன்றி, புகழ் தேடியிருக்கிறார்கள். புகழ் என்று சொல்லுமிடத்தில் ஒருவருடைய திறமையாலோ, அல்லது சாதனையாலோ அன்றி செல்வாக்காலோ கிடைப்பது மட்டும் புகழாகி விடுவதில்லை ஒவ்வொரு மனிதனும் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் உலகிற்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும். அப்படிப் பயனுள்ள வகையில் உழைப்பதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பங்களும் அமைந்து விடுவதில்லை. இன்று நம் சமுதாயம் சீரழிகிறதுஎன்றால் அதற்குக் காரணம், நாம் நாகரிகம் என்ற பேரில் பண்பாடு கலாச்சாரம் இவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவருவது தான் இவைகளை அழியவிடாமல் கடைப்பிடிக்கவும் கட்டிக் காக்கவும் நல்ல நெறிகளைப் போற்றவும் கட்டுக் கோப்போடு வாழவும் நாம் நினைக்கலாம் அன்றி அப்படி வாழலாம். ஆனால் மற்றவர்களை அந்த வழிக்குக் கொண்டுவருவதுதான் முடியாத காரியம். அந்த சக்தி எழுதுகோல் ஒன்றிற்குத் தான் உண்டு. நம்மண்ணில் இன்று எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றனபத்திரிகைகள் வெறும் புதினங்களை மட்டும் சுமந்து வராமல் நல்ல பிரஜைகளை உருவாக்கக்கூடிய விஷயங்களைத் தருவதோடுஒரு கீர்த்தி மிக்க சமுதாயத்தை உருவாக்கும் வகையிலும் செயல்பட வேண்டியது அவசியம்.

இன்று நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிற எழுத்தாளர்கள் எல்லோரும் தொடர்ந்து எழுதிக்கொண்டேயிருக்கவேண்டும். அதனால் நம்சமுதாயம் விழிப்படைய வேண்டும். வளர்ச்சியடைய வேண்டும். திரு செங்கை ஆழியான் அவர்களை எடுத்துக்கொண்டால் அவர் தனது ஒவ்வொரு கதைகளையும் சமுதாயத்தைத் தட்டியெழுப்பும் வகையில் எழுதியிருக்கிறார். தந்திக்கடல் நாகநாட்டு இளவரசி சித்ரா பௌர்ணமி போன்ற சரித்திர நாவல்களைப் படைத்த இந் நாவலாசிரியர் ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப்பனை கொத்தியின் காதல் போன்ற நகைச்சுவை நவீனங்களையும் சுவைபட, அதோடு பயன்பட எழுதியிருக்கிறார் இவர் எழுதிய "காட்டாறு" என்ற நாவல் சாகித்தியமண்டலம் பரிசு பெற்றது. தேசியத் துரோகம் மக்கள் விரோதி மனிதனின் சின்னத்தனம் இவைகளை வைத்து ஒரு சத்திய ஆவேசத்தில் எழுதப்பட்டதாக அவரே சொல்லியிருக்கிறார் இவரது மற்றொரு நாவலான பிரளயம் சாதிப்பிரச்சனையை வைத்து பின்னப்பட்டது. சாதிவெறி சலவைத் தொழிலாளியின் உணர்ச்சிக் கொந்தளிப்பு, சமூக எதிரொலி இவைகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி அழகாக விரிவாக எழுதியிருக்கிறாகள். வாடைக்காற்று, கனவுகள் கற்பனைகள் ஆசைகள் போன்ற காதல் நவீனங்களைக் கூட போட்டி, பூசல், தொழிலாளர் பிரச்சனை சமுதாய சீரழிவுகளை வைத்து பின்னி எழுதியிருக்கிறார். எமது மண்ணுக்கேயுரிய பேச்சு நடையில் சுத்த யாழ்ப்பாணத் தமிழில் காதல் சம்பாஷணை, வாக்குவாதம், கிண்டல் கேலி கேவல் யாவற்றையும் சுவைபட எழுதுவது இவருக்கேயுரிய கலை.

இன்னும் அமரர் கே. டானியல், சொக்கன், பாலமனோகரன், கே. எஸ். ஆனந்தன் பாலேஸ்வரி, யோகா பாலச்சந்திரன், கமலா தம்பிராஜா அருள் சுப்பிரமணியம், (இன்னும் சில பெயர்கள் தற்போது ஞாபகத்திற்கு வரவில்லை) மலையக எழுத்தாளர் தெளிவத்தை யோசப் ஆகியோரும் எமது சமூகத்திற்கு எழுத்து மூலம் அரிய சேவை யாற்றியிருக்கிறார்கள். இன்னும் ஆற்றுகிறார்கள்! ஆற்றுவார்கள்! வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் காவலூர் ஜெகநாதன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் போன்றவர்களோ இலைமறைகாயாக ஒழிந்து கிடக்கும் தமிழ் எழுத்தாளர்களும் நம் சமூகத்திற்கு தொண்டாற்ற முன்வரவேண்டும். குடத்தில் விளக்காக இருக்கும் இவர்களைக் கூடத்தில் ஏற்றி வைக்க ஒரு சுமங்கலிமுன் வந்து நிற்கிறாள். இவள் தீர்க்க சுமங்கலியாக வாழ எழுதுகோல் பிடித்த எல்லோருமே ஒன்றுபட வேண்டும். சமுதாயத்தை நல்ல வழியில் உருவாக்குவது பத்திரிகைகளின் கடமை என்றால் பத்திரிகைகளுக்கு உயிரூட்டுவது எழுத்தாளனே தானே

எமது தமிழ் இலக்கியத் துறையிலே ஈழத்து எழுத்துலக முன்னோடிகள் என்று கருதப்படுகின்றவர்களும் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களுமான அமரர் இலங்கையர்கோனும், திருவாளர் சி. வைத்திலிங்கமும் தமிழ் எழுத்துலகிற்கு பெரும் சேவை செய்துள்ளார்கள். காலஞ்சென்ற இலங்கையர்கோன் (S சிவஞானசுந்தரம்) அவர்களின் "வெள்ளிப்பாதசரம்" என்ற கதையே போதும். அவரது திறமையைப் பறைசாற்ற யாழ்ப்பாண மண்வாசனையோடு நல்லம்மா என்ற வெகுளிப் பெண்ணையும் செல்லையா என்ற முரட்டுக் காளையையும் ஜோடிகளாக்கி இந்தக் காவியத்தைப் படைத்திருக்கிறார். இந்தக் கதையை வாசித்தவர்களின் காதில் நல்லம்மாவின் பாதசரஒலியும், செல்லையாவின் வண்டில் மாட்டின் கழுத்து கழுத்துமணி ஓசையும், இன்னும் கேட்டுக் கொண்டுதான் இருக்கும். இவர் இடைக்காலத்திலேயே மறைந்து போனது ஈழத்து எழுத்துலகிற்கு ஒரு ஈடிணையற்ற இழப்பேயாகும். ஆனாலும் இன்று எம்மிடையே வாழ்ந்து ஒளி வீசிக்கொண்டிருக்கும் திருவாளர் சிவப்பிரகாசம் வைத்திலிங்கம் அவர்கள் இன்னும் பல காலம் வாழ்ந்து நிறையவே எழுதி வாசகர்களுக்குப் புத்துணர்வை ஊட்டுவார் என்றுதான் எதிர்பார்க்கிறோம். அவர்களுக்கும் இந்த சுமங்கலி என்றும் துணைநிற்பாள்.

---

லங்ஸ்ரன் ஹியூக்ஸின்

## அன்னை மகனுக்குச் சொன்னது

தமிழில் :- என். சண்முகலிங்கம்

அருமை மகனே,
என் கதை கேளடா.
என்னுடைய வாழ்க்கை
பளிங்குப் படிகளினுல் ஆனதல்ல,
தடைகள், வெடிப்புகள்,
பிளந்த பாதைகள் ;
கம்பள விரிப்புகள்
அங்கேயில்லை-

வெறுமை எங்கும்
விரவிக் கிடந்தது
என்றாலும் எப்பொழுதும்
நான்
ஏறிக்கொண்டே இருந்தேன்
ஏறுதல், சிலவேளை
இறங்குதல்,
மூலைகள் திரும்பல்
முழு இருட்டில் நடத்தல்
ஆகவே மகனே !
நீ திரும்ப வேண்டாம்
படிகளின
கீழ் இறங்க வேண்டாம்

இறங்குதல் இன்னமும்
கடினமாய் இருக்கும்
நீ விழவேண்டாம்
ஏனெனில் நான் இன்றும்
ஏறிக்கொண்டே இருக்கின்றேன்
என் தேனே !
இன்னமும் இன்னமும்
ஏறவே முயலுவேன்
என்னுடைய வாழ்க்கை
பளிங்குப் படிகளினுல் ஆனதல்ல,

---

லங்ஸ்ரன் ஹியூக்ஸ் (1602—67)

மிஸ்ஸோரியில் பிறந்த கவிஞன் உலகப் புகழ் பெற்ற கறுப்பு எழுத்தாளன். உலகின் முக்கிய மொழிகளில் எல்லாம் இவரது கவிதைகள் வெளியாகியுள்ளன.

The weary Blues (1926) ல் வெளியான இவரது முதல் கவிதைத் தொகுதி The Panther and the lash (1967) பத்தாவது கவிதைத் தொகுதி.

---

# பலதும் பத்தும்

— உருத்திரசன்மன் —

வெவ்வேறு காலங்களில் ஔவையார் என்ற பெயருடன் பலர் இருந்ததாகக் கூறுகிறார்கள். சங்ககாலத்தில் குறுநில மன்னர்களோடு குலவி, பெரு வேந்தர்களோடு பழகி, புலவர் திலகமாய் தமிழ்நாடு முழுவதும் சஞ்சரித்து கவிதைகள் பாடித் திரிந்த ஔவையார் ஒருவர் என்றும், திருவள்ளுவரோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்ற ஔவையார் இன்னொருவர் என்றும், ஆத்திசூடி கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களைப் பாடிய ஔவையார் இன்னொருவர் என்றும் கூறுகின்றார்கள். இது எவ்வாறாயினும் ஆகுக.

ஔவையார் பாடியனவாகக் கூறப்படும் சங்கநூற் பாடல்களையும், நீதிநூல்களையும் மற்றும் தனிப் பாடல்களையும் படித்து ஒரு சேர நோக்கும் பொழுது மனக்கண்ணிலே ஒரு சித்திரம் உருவாகின்றது. அம் புலிமானில் தென்படுகின்ற நிழல்போலே கைத்தண்டுடன் கூனிக்குறுகிய வெள்ளைக் கலையுடுத்த உருவம் நெற்றியில் திரிபுண்டரமாக அணியப்பெற்ற சுந்தரத் திருநீறு முகத்தில் இது, இது, இது, இது, என வேறு பிரித்துக் காணமுடியாத முறையில் ஞானஒளியும் கருணையின் தன்மையும இப்படி ஓர் உருவம்

ஔவையார் பற்றி வழங்கும் வாய்மொழிக் கதைகளிலும், மற்றும் இலக்கிய ஆதார நூல்களிலும் ஔவையார் செய்தனவாகப் பல கூறப்படுகின்றன. அவர் அவற்றைச் செய்தனரோ செய்யவில்லையோ தெரியாது. ஆனால் ஒன்று சொல்லலாம் அவர் செய்தனவெல்லாமே தவச்செயல்கள். அவற்றுள் ஒன்று அவர் எம்மக்கள் தெய்வமாக விளங்கும் பிள்ளையாரைக் கும்பிட்டது ஆகும்.

ஞான அனுபவ முதிர்ச்சியில் விளைந்த குழந்தைப் பிள்ளைக் குணத்தோடு, நான் உனக்கு இது தருகிறேன். நீ எனக்கு இது தாவென்று ஐந்து கரப பிள்ளையைக் கும்பிடுகிறாள் ஔவை.

பாலுந் தெளிதேனும் பாகும்
பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தரு
வேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணி
யே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

வானத்தைக் கேட்டாள் இல்லை. மண்ணைக் கேட்டாள் இல்லை. முத்தியினைக் கேட்டாளில்லை கேவலம் இந்தத்தமிழைக் கேட்டாளே! அப்படி இத்தமிழில் அவள் என்னத்தைத் தான் கண்டாள். அரசமரத்தடியில் புத்தபகவானைப் போல் குளக்கரையில், நதிக்கரையில், முச்சந்தியில் நாற்சந்தியில் கண்டு கும்பிட்டுப் பரிச்சயமான தெய்வம் போலும், அதனால் பகிடி விட்டு விளையாடுகிற பாவனை. நான் உனக்கு பால் முதலிய நான்கும் தருகின்றேன் நான் மூன்றுதானே கேட்கின்றேன் என்ற தொனி!

அழகிய அச்சுவேலைகளுக்கு
உமா அச்சகம்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

# நாட்டார் பாடல்

## வசந்தி இராமநாதன்

ஒரு நாட்டினுடைய தொன்று தொட்டு வரும் வாழ்க்கை முறையினையும், பேச்சு வழக்கினையும் கலா ரசனையையும் அறிந்து கொள்வதற்கு நாடோடிப் பாடல்களும் நாடோடி நடனங்களுமே உதவி புரிகின்றன. நாடோடிப் பாடல்களும் நடனங்களும் எல்லாத் தேசங்களிலும் ஜீவனோடுலாவிவரும் பாடல்களாக உள்ளன. பாமர மக்களுடைய வாழ்க்கையில் இவை முக்கியமான இடத்தை வகிக்கின்றன

பாட்டாளி முதல் பாமரமக்கள் வரை எல்லோரும் குரற் பயிற்சி அற்றவர்கள் கூடப் பாடுவதற்கு ஏற்றவையாக இவை அமைந்துள்ளன. இப்பாடல்கள் எளிய இசையிலும் எளிய சொற்களாலும் இயற்றப்பட்டு கேட்ட மாத்திரத்திலேயே எவரும இதைப் பாடக்கூடியதாக அமைந்துள்ளன. நாடோடிப் பாடல்கள் அநாதி சம்பிரதாய வாயிலாக வளர்ச்சியடைந்ததோடு இவைகளை இயற்றிய வாக்கேயகாரர் யாவரென்று அறியாவண்ணம் தொன்று தொட்டு வழங்கி வருதலால் இவைகளை வாய்மொழி இலக்கியம் எனவும் பெயர் கொண்டழைப்பர் மேலும் இவைகளுக்கு லக்ஷணங்களோ லக்ஷியங்களோ இவை வளர்ச்சியடைந்த விதமோ யாவரும் அறிய முடியாதுள்ளது.

நாகரீக உலகில் இசையானது வளர்ச்சி அடைவதற்கு நாடோடிப் பாடல்களே காரணமாகும். நாடோடிப் பாடல்களை நாட்டுப் பாடல்கள். கிராமியப்பாடல்கள், நாட்டார்பாடல்கள், பாமரர்பாடல்கள் எழுதாக்கவிதைகள் நாட்டார் இலக்கியம எனப் பல பெயர் கொண்டழைப்பர் நாட்டார் பாடல்களின் இசை உருவமானது அழிந்து போகாமல் காப்பாற்றபபடவேண்டுமென்ற உயரிய நோக்குடன் மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் அவரது காலத்தில் வழக்கதிலிருந்த நாட்டுப்பாடல்களின் வர்ண மெட்டுகளைத் தன்னுடைய இசை நாடக உருப்படிகளின் வாயிலாகவும் திவ்யநாமகீர்த்தனைகள் வாயிலாகவும் உற்சவ சம்பிரதாய பாடல்களின் வாயிலாகவும் அவை மறைந்து போகாமல் நிலைத்திருக்கும வண்ணம் செய்துள்ளார்.

நாட்டார் பாடல்கள் நீலாம்பரி, குறிஞ்சி, புன்னாகவராளி, நாதநாமக்ரிய, நவரோஜ் போன்ற ராகங்களிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன. அதிகமாக சாபுதாளங்களிலேயே அமைந்துள்ளன. எனினும் ரூபக தாளம், ஆதி தாளம் போன்ற தாளங்களிலும் இப்பாடல்கள் அமைந்துள்ளன. சில பாடல்கள் திஸ்ரகதியிலும் அமைந்துள்ளன. நாட்டார் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம், நாட்டுப் போக்கான தன்மையுடையவை, நாகரீகமான தன்மையுடையவை. நாட்டுப் போக்கான தன்மையுடைய பாடல்களாவன விவசாயம் கைத்தொழில், கப்பற் பாடல்கள் போன்றவை. இவைகளை நாட்டுப் புறங்களில் கேட்கக் கூடியதாக உள்ளது. நாகரீகமான தன்மையுடைய பாடல்களான கல்யாணப் பாட்டுக்கள், புராண சம்பவங்களான பாடல்கள் ஒருவாறு மெருகேற்றிய இசையானது பல இடங்களிலும் கேட்கக்கூடியதாக உள்ளது. மெருகேற்றிய இசையாகவுள்ள நாடோடிப் பாடல்களான கல்யாணப்பாடலில் லாலி நலுங்கு ஊஞ்சல் போன்றவை குறிப்பிடத்தக்கன.

நாடோடிப் பாடல்களில் பல வகைகள் உள்ளன. நீதிக்கருத்துக்களைக் கொண்ட பாடல்கள், வேதாந்தக் கருத்துக்களைக் கொண்ட பாடல்கள், சடங்குப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், தொழிலாளர் பாடல்கள் விவசாயப் பாடல்கள் தாலாட்டு, பக்திப் பாடல்கள் ஒப்பாரி கைத்தொழிற் பாடல் இதிகாச புராண பாடல்கள் கும்மி, கோலாட்டப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் என பல வகையாகப் பாகுபடுத்தலாம்.

இப் பாடல்கள் யாவும் உலகமுள்ளளவும் நின்று நிலைபெறும பாடல்களாகும், பாரதியாரே தமது பாடல்களில் நாட்டுப் பாடல்களின் அமைப்பையும சந்தத்தையும் பயன்டுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழிலுள்ள நாட்டுப் பாடல்களைத் தேடித் தொகுத்து நூல்களாக வெளியிடுவதில் அறிஞர் பலர் முயன்று வந்துள்ளனர்


### எழுத்தாளப் பெருமக்களே!

ஆற்றல் மிக்க உங்கள் படைப்புகளை சுமங்கலி
ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்ருள்.
அவை புதிய தலைமுறையினரை உருவாக்க
எமக்குப் பேருதவியாக அமையும்.

எமது முகவரி:

ஆசிரியர் குழு
சுமங்கலி
மே/பா உமா அச்சகம்
கனக பை அவென்யூ
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்


# மனையும் மனைமாட்சியும்

## மங்கையரே!

வீட்டு வாசலில், முற்றத்தில் வண்ண வண்ணக் கோலமிடுதல் ஒரு தெய்வீகமான அழகுக்கலை. புள்ளிகளை ஒழுங்கமைத்து இச்கோலம் புதுப் புது வார்ப்புகளில் பிறைமுகளில்லாமல உயிர்க்கலை கொண்ட கோலச் சித்திரமாக முழுமை பெறும்போது வாழ்க்கையின் மங்களத்தை விரும்புகின்ற ஒரு மானசீக வழிபாடே அது போலிருக்கும்.

இதை நீங்களும் ஏன் செய்யக்கூடாது. மாதம் ஒரு முறை ஒருநாள் இந்த அழகு தரும் கோலம் உங்கள் வீட்டு வாசலை அலங்கரித்தாலென்ன? இது வெறும் அழகுக்கு மட்டுமல்ல போட்டுப் பாருங்களேன். இந்த உயிர்ச்சித்திரத்தை! வாழ்வில் ஏற்றி வைத்த ஒளிக்கு இது ஒரு திருமுகம் போலவே நிற்கும்.

வாழைத்தண்டின் விசேஷங்கள் பற்றி நாம் தரும் சில சுவையான தகவல்கள்:

1 வாழைத தண்டைக் கறி செய்து சாப்பிட்டால் வயிற்றிலுள்ள கற்கள் வெளிவந்து விடும். (தபாப்பச்சடியும் செய்யலாம்.)

2. வாழைத் தண்டு சாறு பிழிந்து வாரம் ஒருமுறை அருந்தினல் உடல் பருமன் குறையும்.

3. வாழைத் தண்டின் ரசத்தை அருந்திக் கடல் நீரில் அடிக்கடி குளித்து வந்தால் உடல் அழகு பெறும்.

4. வாழைத்தண்டு வயிற்றுக் கோளாறைச் சரிசெய்யும்.

5. வாழைத்தண்டின் நாரை வெய்யிலில் உலர்த்தித் திரிசெய்து, நெய்விட்டு சுவாமிக்கு விளக்கேற்றுவது மிக நன்மை பயக்கும்.

## அழகுக் குறிப்பு

குளிக்கப் போகுமுன் வெண்ணெயிற் சிறிதளவு எடுத்து முகத்தில் நன்ருகத் தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின் கடலை மாவினுல் முகத்தைக் கழுவினுல் நிறம் கூடும் சருமம் மென்மையாகும். முகத்தில் பருவோ, கொப்புளங்களோ இருந்தால் சிறிது கெட்டியான தயிரை ஒரு துணியில் முடிந்து வைக்கவும். ஜலம் வடிந்தபின் அதனுடன் சிறிது மஞ்சள்பொடி, கடுக்காய் பொடி, சந்தனவிழுது இறைற்றைக் கலந்து முகத்தில் தடவி அரைமணி நேரம ஊறியபின் பயற்றம் மாவினுல் தேய்த்து அலம்பினுல் முகம அழகாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

3. தினமும் தக்காளிப் பழம் ஐந்து தேசிப்பழம் மூன்று இவற்றை எடுத்துச் சாறு பிழிந்து இதனுடன் ஒரு மேசைக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நிறம் சிவந்து பளபளப்படையும்.

4. ஆரஞ்சுப் பழத் தோல்களை எடுத்துக் காயவைத்துப் பொடி செய்து குளிக்கும் போது முகத்திற்கும் உடலிற்கும் பூசிக் கொண்டால் பளபளவ்ப்பேற்படும்.

சமையற் குறிப்பு:

## சமையல் குறிப்பு

### கருஞ்சி

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| தேங்காய் | — 1 |
| கோதுமை மா | — 1/2 கி. |
| சீனி | — 4 மே க |
| பேரீச்சம்பழம் | — 1/4 கி. |
| ஏலம் | — 10 |
| கலறிங் பவுடர் சிறிதளவு | |
| தே. எண்ணெய் | —1/2 போ. |

செய்முறை:-

தேங்காயைத் துருவி பின் அவற்றைச் சிறிது நேரம் வெயிலில் உலரவிட வேண்டும் பின் ஒரு பாத்திரத்தில் சீனிப் பாகு காய்ச்சி வைத்துவிட்டுக் காயவைத்த தேங்காய்த் துருவலை செந்நிறப் பருவத்தில் வறுத்தெடுத்து சீனிப்பாகு உள்ள பாத்திரத்தில் அவற்றைக் கொட்டியபின் பேரீச்சம்பழத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி முன்பு செய்த கலவையுடன் இவற்றைக் கலந்து ஏலக்காய்ப் பொடியையும் அவற்றுடன் சேர்த்து நன்ருகக் கரண்டியால் சேர்த்து இன்னுரு சுத்தமான பாத்திரத்தில் அவற்றை எடுத்து வைக்க வேண்டும்.

கோதுமை மாவைப் பற்றீஸ் ரோலுக்குப் பிசைந்தெடுப்பது போல் பிசைந்தெடுத்து அதன் பின்பு அம்மாவை வைத்து மெல்லியதாக உருட்டியபின் அவற்றை அளவான சதுரவடிவான துண்டுகளாக வெட்டி அவற்றுள் கலவையை வைத்து முக்கோண வடிவில் மடித்துப் பின் ஒன்ருகச் சேர்த்தமுக்கோணப் பகுதியை முள்ளுக் கரண்டியின் நுனிப் பகுதியால் வைத்துச் சரிசெய்தபின் அவற்றை எண்ணெய்ச்சட்டியில் போட்டுப் பொரித்தெடுத்து ஆறிய பின் உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கோ, பிள்ளைகளுக்கோ, உறவினர்களுக்கோ பரிமாறி உங்கள் கைவண்ணத்தின் மகிழ்ச்சியை அவர்களுடன் கலந்து பகிர்ந்து கொள்ளுங்களேன்.

சாக்கடை நீரில் குப்பையைக் காண்பதா வானத்தைக் காண்பதா அது உன் விருப்பம்.

— ரஸ்கின்

# பெண் உரிமை

## க. பகிரதன்

ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெண்களின் மறுமலர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என்பதே நாம் கவனிக்க வேண்டியனவாகும். சட்டங்கள் பெரும்பாலும் ஆண்களாலேயே இயற்றப்பட்டவை. தமக்குத் தாமே பணித்துக்கொண்ட இந்த வேலையில் ஆண்கள் எப்போதும் நியாயமாகவும் தராதரம் பார்த்தும் நடந்து கொண்டிருக்கிருர்கள் என்று சொல்வதற்கில்லை.

பெண்களிடம் இயற்கையாகவே குறைதிசயங்கள் இருக்கத்தான் வேண்டும் என்று பழைய முன்னேடிகளான சாஸ்திரங்கள் கூறுகின்றன சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள இந்த மாசுகளை அகற்றுவதே பெண்களின் மறுமலர்ச்சிப் பணியில் நாம் செய்ய வேண்டிய பெரியதோர் முயற்சியாய் இருக்கவேண்டும இம் முயற்சியை நாம் செய்வதற்கு உள்ள தூய்மையும் உறுதியும் தன்னடக்கமும் உள்ள பெண்களை நாம் தோற்றுவிக்க வேண்டும்.

மேல் நாட்டினரது முறையை இலங்கைவாழ் அதாவது யாழப்பாணத்துப் பெண்கள் அப்படியே பின்பற்றுவது கூடாது, அந்தமுறை அவர்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றதாயிருக்கலாம. யாழ்ப்பாணத்துப் பண்புகளுக்கும், யாழ்ப்பாணத்து சூழ்நிலைக்கும் ஏற்ற முறைகளையே நமது பெண்கள் பின்பற்றுதல் வேண்டும்,


ஆண், பெண் சமத்துவத்தை எடுத்து நோக்கின் ஆணைப்போலவே பெண்ணுக்கும் அதே சிந்தனைத்திறன் இருக்கின்றது. நான் நினைக்கிறேன் அடிப்படையில் ஆண்களும், பெண்களும் ஒன்றேதான் ஏனெனில் இருவருக்

6 ம் பக்கம் பார்க்க


சிறந்த முறையில் உங்கள் இல்லங்களை மின்பல்புகளினுல் அலங்கரிப்பதற்கும் வேறு மின்சார உதிரிப் பாகங்களை மலிவாகப் பெற்றுக்கொள்வதற்கும் இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:

ஹப்பி எலக்ரிகல்ஸ்

கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.



# ஜடம்

ஆனந்தி

பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருக்கும் பாலகுமார் என்கிற அந்த இளம் வயதுச் சங்கீத வித்துவானைப் பற்றி வீணு மிகவும் பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தாள். விடியற்காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்திருந்து அவன் சாதகம் பண்ணுகிற கம்பீரமான முகம் வீணுவின் வீட்டுச் சுவர்களிலெல்லாம் ஒரு தேவகானமாய் வந்து எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

காற்றிலே கரைந்து சிதறிப் போகாமல், மனதை ஊடுருவிச் சிலிர்க்க வைத்துவிட்டு போகிற அவனுடைய குரல் இனிமையைக் கேட்டவாறே வீணு தூக்கம் கலைந்து எழுந்திருப்பாள்,

அவன் அந்த ஊருக்கு வந்து ஒரு கிழமை தான் ஆகியிருந்தன. வயதான ஒரு தந்தையும். கல்யாணமாகாமல் இருக்கிற இரு சகோதரிகளுமே அவனுடன் துணையாக வந்து இருக்கிறார்கள். அவன் எங்கோ ஒரு கல்லூரியில் சங்கீத வாத்தியாராக இருந்தாலும் அது தவிர வீட்டிலே வேறு வகுப்பு நடக்கிறது. மாலை வேளைகளில் அவன் வீட்டு வராந்தா ஒரே அமர்க்களமாக இருக்கும்.

அவனுடைய மாணவர்களெல்லாம் பெரிய இடங்களிலிருந்தே வருபவர்கள். ஊர் முழுவதும் அவன் புகழ் கொடி கட்டிப் பறக்கிறது.

அவன் வெளியே வருவதே குறைவு. கல்லூரிக்குப் போகும் போது தன்னுடைய காரிலே திரைக்குள் மறைந்து செல்கிறான். வீணு அவன் முகத்தைக் கற்பனையில் நினைத்துக் கொண்டுஉயர்ந்த கலையுள்ளம் கொண்ட அவனை கௌரவ புருஷனாகவே எண்ணி அவன் மீது ஓர் அபார பக்தியையே வளர்த்துக்கொண்டிருந்தாள்.

அவனை ஒரு முறையாவது நேரில் சந்தித்துப் பேசிவிட்டு வரவேண்டுமென்று அவள் ரொம்ப ஆர்வத்தோடு விரும்பினாள். ஆனால் வலியப்போய் அவனுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்வது நாகரீகமாக இராது என்று கருதி அவள் அவனைச் சந்திப்பதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை எதிர்பார்த்து வெகுவாகக் காத்துக் கொண்டிருந்தாள்.

அவள் ஒரு சங்கீத ரசிகையாக மட்டுமே இருக்கிறாள். அதை ரசிக்க முடிந்த அளவுக்கு அவளால் பாட முடியவில்லை. அது அவளுக்குத் துன்பமாகவே இருந்தது.

ஒரு நாள் அவள் தெருவுக்கு வந்தபோது பாலகுமாரின் வீட்டு வாசலிலே சாத்திக் கிடந்த கேட்டின் கம்பிகளுக்கு நடுவில் முகம் புதைத்து ஓர் ஏழைச் சிறுமி உள்ளேயிருந்து வரும் அவனின் பாட்டைக் கேட்டு ரசித்தவாறு தன்னை மறந்து நின்று கொண்டிருப்பது தெரிந்தது. மாலை வெய்யிலின் மங்கிய நிழலில் அவள் இயக்கநிலை விட்டுப் போன வண்ணம் ஜடமாய் நிற்கிற மாதிரி இருந்தது.

வீணுவைக் கண்டதும் அவள் திடுக்கிட்டு முகத்தை நிமிர்த்தினாள். அவளுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும். வாழ்க்கைப் போராட்டத்திற்கு நடுவே அவள் செல்லரித்துப் போன ஏழ்மை நிலையிலேயிருந்தாலும் கற்பனையிலே உண்மையைக் காண விரும்பும் அவள் சுயநிலை இழந்தவள் போல் மயங்கிய கண்களுடன் தோன்றியதைப் பார்க்க வீணுவுக்கு ரொம்ப மனவருத்தமாக அது ஒரு ஈடு செய்ய முடியாத துக்கமாகப் பட்டது

அவளிடம் ஓர் அறிமுக நேசத்தை வரவழைத்துக் கொண்டு சிரித்தவாறே அவள் கேட்டாள்.

"என்ன ? உனக்குப் பாலகுமார் பாட்டுப் பிடிச்சிருக்கோ'

''ஓ ! நான் கடைக்குப், போறபோதெல்லாம் அவர் பாட்டுக் கேட்காமல் போகவே மாட்டன், எனக்குப் பாட்டென்றாலே போதும். என்ன பாட்டென்றாலும் விரும்பிக்கேட்பேன். எங்கள் வீட்டிலே ரேடியோ கூட இல்லை. அப்பா கூலிவேலை செய்கிற போது இதெல்லாம் வாங்க முடியுமா ? என்ன ? இப்படி யாராவது பாடிக் கொண்டேயிருந்தால் போதுமே மனதிலே ரேப் எடுத்து நானும் பாடுவேனே !

என்ன ? நீயும பாடுறனியா? நான் நினைத்தேன் இந்தப் பாலகுமார் பட்டும்தான் பாடுறதுக்கு இருக்கிறார். ஊர்முழுக்க அவர் பாட்டு ரொபப்பிரபலமாயிருக்கு, லவுட்ஸ்பீக்கர் வைத்துப் பாடுகிறமாதிரிக் காதிலே கணீரென்று விழுகிறது: நீயும் அவர் மாதிரிப் பாடுவியா ?

அவள் வெட்கத்தில் பதில் சொல்ல வராமல் மௌனமாக இருந்தாள். வீணுவே தொடர்ந்து கேட்டாள்.

'' உனக்கு என்ன பெயர் ? ''

" சகுந்தலா "

''தெருவிலே நின்று பேசுகிறோமே; வேண்டாம் போறவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். என்வீடு பக்கத்திலே தான் இருக்கு நீ உள்ளே வாறியா ? ''

" இல்லையக்கா, நான் போகவேணும் அம்மா என்னை ஏசுவா, நான் நாளைக்கு வாறன் இந்த இடத்திலேயே வந்து நிற்பேன். ஆனால் இப்படியெல்லாம் வெளியிலே நின்று கேளாமல், அவரிடம் போய், நானும் சங்கீதம் படித்தாலென்ன ? என்று நினைத்தேன். அது சரிவராமலே என்ரை ஆர்வம் அணைந்து போச்சு.

" ஏன் ? அப்பாவுக்கு விருப்பமில்லையோ ? ''

'இல்லையக்கா அவர் ஒன்று? சொல்லலை என்னைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்தவரே அவர்தான். நான் ரொம்ப ஆசையோடு உள்ளே போனேன் சங்கீத வாத்தியாருக்கு. எங்களைப் பார்த்ததுமே கோபமாய்ப் போச்சு. எனக்கு வயது போதாதென்று விரட்டி விட்டார். '' ''இல்லை நீ ஏதோ கனவு கண்டிருக்கிறாய் அவர் உயர்ந்த கலைஞரல்லவே அப்படியெல்லாம் முறைகேடாய் நடந்து கொள்ளவே மாட்டார் நீ பொய் சொல்கிறாய்.

ஐயோ அக்கா ! பொய் சொல்லவே எனக்குப் பிடிக்காது. நான் ஏன் ? இதிலே பொய் சொல்லவேணும். நீங்கள் நம்புவதற்காக இதை எப்படி மாற்றிச் சொல்லுறது. நீங்கள் வேணுமானால் கேட்டுப் பாருங்கோ. '' நானு '' நான் போகத்தான் வேணும். அவரை நான் புரிந்து கொள்ள வேண்டாமா ? புரிந்து கொள்ளவேண்டி அவசியம் இருக்கு நான் அவருடைய பாட்டை ரசிக்கிறவள் அவர் மீது அபார பக்தி கொண்டிருக்கிறவள். உண்மை அறியாமல் மனிதனை நம்பக் கூடாது. எனக்கு நீ சொல்வதைக் கேட்க மனவருத்தமாக, ஏன் ஏமாற்றமாகக்கூட இருக்கு, உண்மையில் அவர் அப்பிடியிருந்தால் அது கேவலம். உனக்கோ எனக்கோ இல்லையே !சரி எப்ப போவம் ?

''நாளைக்கு நான்கு மணிக்கு நீங்கள் தயாராக இங்கே வந்து நில்லுங்கோ நான் வாறன்.

வீணு வீடு திரும்புகிறபோது பாலகுமார் இன்னும் பாடிக் கொண்டிருந்தான். திரை மறைவில் அவன் அறிந்து கொள்ள முடியாமலிருந்தது. அவன் முகம் ஒரு தேவ புருஷனுக்குரிய அழகுடன் தோன்றி அவளை வருத்தியது. அது வெறும் கற்பனையாகப் போய் விடக் கூடாதே என்ற கவலையுடன் அவள் பன்னலை இழுத்து மூடினாள் எனினும் அவன் பாட்டு நிற்கவில்லை

மறுநாள் மாலை நான்கு மணிக்கு வீணு சகுந்தலாவை எதிர்பார்த்துத் தெருவுக்கு வந்தபோது பாலகுமாரின் வீட்டு வாசலில் கேற்றருகே அவள் வந்து காத்துக் கொண்டிருந்தாள். அவள் இன்னும் பாலகுமாரின் பாட்டைக் கனவில் கேட்டு மகிழ்ந்து போகிற பிரமையுடனேயே தன்னை மறந்து நின்றிருந்தாள். அவள் தன்னுடைய இயல்பான ஏழ்மை நிலையிலிருந்து மாறாமல் மிகவும் எளிமையாக இருந்தாள்.

வீணு பணக்காரப் பெண்ணாகப் பிறந்திருந்தாலும் கர்வமில்லாமல் எல்லோரோடும் புரிந்து கொண்டு பழகுவதால் சகுந்தலா விடயத்திலும் இந்த முரண்பாட்டைப் பெரிதுபடுத்தாமல், அவள் கலை ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அதை வளர்க்க வேண்டுமென்பதே அவளின் கனவாக இருந்தது. அதனால் அவள் வேறுபாடுகளை மறந்தவளாய் சகுந்தலாவைத் தனக்கு நெருங்கிய உறவாகவே நினைத்துக் கொண்டு அவளுடன் பாலகுமாரைச் சந்திப்பதற்குக் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

அவனுடைய சங்கீத வகுப்பு நடக்கிற அந்த வராந்தாவில் அவன் தனியாக அமர்ந்து எதையோ மெல்லிய குரலில் ராகமிழுத்துப் பாடிக் கொண்டிருந்தான்.

அவர்கள் வருவதைக் கண்டதுமே அவன் பாடுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்து பார்த்தான். இரு துருவங்கள் போல் வந்து நிற்கும் அவர்களை இனம் காண விரும்புவது போல அவன் கண்கள் அலைபாய்ந்தன. அவன் நல்ல உயரமாகக், கம்பீரமாக இருந்தாலும் முகத்திலே அவன் குரலினிமைக்குப் பொருத்தமற்ற முற்றிலும் மாறான ஒரு கர்வம் தெரிந்தது. வீணு அதை மனதில் ஜீரணிக்க முடியாமல் தவித்துக் கொண்டே அவன் முன்னால் வந்து, ஒதுங்கி நின்றிருந்தாள். பக்கத்திலே சகுந்தலாவின் நிழல்.

அப்போது அவன், மிக இயல்பான குரலிலே கேட்டான்.

" என்ன வேணும் ? ''

நான் பக்கத்து வீட்டிலே குடியிருக்கிற ஒவசியரின் மகள் நான் உங்கள் ரசிகை, உங்கள் உயர்ந்த கலைப்பாட்டு எனக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கு. உங்கள் புகழ் ஊர்முழுக்கப் பரவியிருக்கு ஒரு சங்கீத வித்துவானே எங்கள் ஊருக்குக் கிடைத்தது மிகப்பெரிய பாக்கியம்' மாலை நேரங்களிலே நீங்கள் பிள்ளைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிற பொழுது ஒரே அமர்க்களமாக இருக்கு இந்த வகுப்பிலே வந்து கலந்து கொள்ள ஏதாவது நியந்தனைகள் இருக்கிறதா ?

''ஏன் ! நீங்கள் பாட்டுக் கற்றுக கொள்ளப் போகிறீர்களா ? ''

இல்லை எனக்குப் பாடவே வராது. குரலும்இனிமையில்லை இதோ இந்தச் சிறுமி நிற்கிறாளே! இவள் நல்ல கலை ஆர்வத்தோடு இருக்கிறாள் நன்றாகப் பாடுவளாம்.

அவன் குறுக்கிட்டு இடைமறித்துப் பேசுகிறபோது, அவன் முகமே மாறியிருந்தது கண்களை நிலைகுத்தி, ஏளனமாய் சகுந்தலாவைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

'' என்ன நேற்று அதுதன் உனக்கு நான் சொல்லி அனுப்பினேனே இஞ்சை பார் ஒரு கலை இருக்கலாம் நான் அதை மறுக்கேலை, நீ அதைத் தானாகவே விருத்திபண்ணிக் கொள்ளலாம். அதுக்கு நான் தடையில்லை. ஆனால் உன் நிலைமையிலே உன்னை நான் தட்டிக் கழிக்க வேண்டிய அவசியம் எனக்கு இருக்கு, இதுக்கெல்லாம் பெரிய முதல் வேணும். அட்வான்ஸாக நூறுக்கு மேல் வைக்கவேணும் உனக்கு இதெல்லாம் கட்டுப்படியாகாதே மேலும் நீ குழந்தை வயது போதாது. ''

அவன் இதைச் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பி வீணுவை நிமிர்ந்து பார்க்கிற போது அவள் முகம் உணர்ச்சியில் குழம்பியிருந்தது. அவள் இதை எதிர்பார்த்து வரவில்லை அவன்மீது எவ்வளவு மதிப்பு, நம்பிக்கை வைத்திருந்தாள். ஆனால் இப்போது அவன் ஒரு வெறும் மனிதன் என்று அவளுக்குப் புரிந்ததால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாய், தர்மாவேசத்தோடு அவள் கேட்டாள்.

போதும் நிறுத்துங்களேன். நான் உங்களோடு சண்டை பிடிக்கவோ, இவளுக்கு சிபாரிசு பண்ணவோ வரேலை, சிபாரிசு பண்ணியும் லஞ்சம் கொடுத்தும், கலையை வளர்க்க முடியாது. அது தானாகவே ஒரு தெய்வீகத் தன்மையோடு சத்தியம் மாறாமல் வளர வேணும். இவள் குழந்தை என்று சொல்கிற இந்த நியாயம் ரொம்ப அபத்தமான பொய்யாய் இருக்கு. தமிழ் நாட்டிலே ஆறு வயதுக் குழந்தை கூட சங்கீதம் கற்றுக் கொள்ளுதே. இவள் படித்தாலென்ன காசு இல்லையே என்பதற்காக இவளுடைய கலை ஆர்வத்தை மறுக்கிறதும் நசுக்கிவிட நினைக்கிறதும் பெரியபாவமில்லையா ? நயனை இவளுக்குப் பணம் கொடுப்பேன் ஆனால் நீங்கள் நினைக்கிற மாதிரி உங்களைத் தட்டிக் கொடுத்து வளர்க்கிற மாதிரி எனக்கு இந்த வியாபாரக் கலையிலே இஷ்டமில்லை. இவள்தான் உங்கள் பாட்டை ரேப் எடுத்து நன்றாகப் பாடுவாளாம். அந்த வழியிலே நான் இவளை ஒரு கலையரசியாகவே வளர்த்துக் காட்டுவேன் ஏகலைவன் குரு இல்லாமல் வித்தை கற்றுக்கொள்ளவில்லையா? அப்ப சரி ரொம்ப சந்தோஷம் நாங்கள் போட்டு வாறம்.

சகுந்தலாவுடன வீணு தெருவுக்கு வரும்போது சொன்னாள்.

கவலைப்படாதே சகுந்தலா நீ தான் எல்லாத்தையும் ரேப் எடுத்துப் பாடுவியே! இவன் எதுக்கு. நான் உனக்கு ஒரு ரேடியோ வாங்கித் தாறன் கசெட்டுகள் தாறன். உன் கலையை வளர்க்க அது தெய்வம் போல நின்று உதவி செய்யும் வெறும் ஜடம். ஆமாம் ஜடம் என்றாள்.

சகுந்தலாவுக்கு அந்தக் கடைசி வார்த்தை புரிந்ததோ ? என்னவோ ?

(யாவும் கற்பனை)

## மாணவர் [illegible]கம்

# நான் அறிந்த பெரியார்

### சோமசுந்தரப் புலவர்

நான் அறிந்த பெரியார்களில் ஒருவர் சோமசுந்தரப் புலவர். இவர் நவாலியூரிலே கதிர்காமர் இலக்குமி பிள்ளை என்பவர்களுக்கு கி பி 1880 ஆனி மாதம் 12 ஆம் நாளிற் பிறந்தார். சோமசுந்தரப் புலவருக்கு ஏடு தொடக்கி ஆரம்பக் கல்வியை கற்பித்தவர் மானிப்பாயிலிருந்த அருணாசல உபாத்தியார் ஆவர் பின்னர் சிறந்த தமிழ் அறிஞராய் விளங்கிய தந்தையாரிடமும் நவாலியூரிலுள்ள தமது உறவினரான இராமலிங்க உபாத்தியாரிடமும் சோமசுந்தரனார் ஆங்கிலமும் தமிழும் கற்றுப் புலமை எய்தினார். பின்னர் வடமொழி நூல்களிலும் பயிற்சி பெற்றார். புலவர் தமது பதினைந்தாவது வயதிலேயே பாடல்களை ஆக்கத் தொடங்கிவிட்டார். பதினைந்தாம் வயதிலே அட்டகிரி முருகவேள் மீது பதிகம் பாடியபோது பலர் வியந்து அவரைப் பாராட்டினர். யாப்பிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதற்கு முன்னரே தனிப்பாடல்கள் பலவற்றைத் திறம்படப் பாடும் வல்லமை புலவருக்கு இயல்பாகவே அமைந்து கொண்டது.

அதனால் அவரை வரகவி என்று வழங்குவாராயினர். புலவர் சின்னம்மையார் என்பவரை மணஞ் செய்துகொண்டார். சின்னம்மையார் கல்வியறிவும் நல்லொழுக்கமும் நிறைந்தவர், கணவனைத் தெய்வமாக வணங்கும் இயல்புடையவர். 1925 ஆம் ஆண்டு உயிரிளங்குமரன் என்ற நாடகத்தை எழுதி நடித்தார். ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி முதலிய பாடல்களையும் பாடினார். இவ்வாறு இவ்வாழ்விலே வைகித் தமிழ்த் தாய்க்குப் பெருந்தொண்டு செய்த பெரும் புலவர் கி. பி. 1953 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் நாள் சிவபதமெய்தினார்,

நந்தா திருச்செல்வம்

# காதலுக்கு கால் இல்லை

ஒரு குடம் பாலிலே ஒரு துளி விஷம் கலந்தாற் போல் மெய்யான வாழ்விலே பொய்விஷம் கலந்ததாலே நட்பெண்ணை நீ இழந்தாய்! பொய் சொல்லலாகாது பாவாய்! அன்பு வாழ்க்கைக்கு கெடுதலாச்சு பாராய்!

உங்கள் பார்வைதனை என் விழிகள் கண்டதனால் நான் கொண்டேன் உன் மயக்கம் மயக்கும் மாலைப் பொழுதை மங்கைக்கெனக் களிப்பாயா?

நான் கன்னியல்ல கவலை என்னும் கணைகளைக் கல்யாணம் செய்துதான் பல வருடம் ஆகுதே! இன்னும் நான் கன்னியா?

காதலுக்கு கண் இருக்கிறதோ இல்லையோ நான் அறியேன். ஆனால் நான் காதலிக்க முனைந்தபோது அதற்கு கால் இல்லையெனத் தெரிந்துகொண்டேன். ஏனென்றால் அது நடக்கவில்லை.

சியாமினி நாகராஜா

# சுமங்கலியின் கவிதைப் போட்டி

பங்கு பற்றுவதற்குத் தொடர்ந்து படியுங்கள்

## உங்கள் சிந்தனைக்கு

1. திருவாசகம் யாத்த பெருமை யாருடையது?
2. "சிலம்புச் செல்வி" என்ற சிறப்புப் பெயர் கொண்டு சிலப்பதிகாரத்தில் அழைக்கப்படுபவர் யார்?
3. "பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்"
   (இது ஓர் பழமொழி கருத்துத் தருக)
4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எத்தனையாவது குரவர்?

கண்ணினைக் கருத்தாய்க் காக்கும் வகைகள் சில கூறுக?

உங்கள் விடைகளை 10-09-86 க்குமுன் எமக்குக் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர் குழு
"சுமங்கலி"
மே/பா உமா அச்சகம்
கனகசபை அவென்யூ
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

# பெண் உரிமை

1ம் பக்கத் தொடர்ச்சி

கும் உரிமைகள் ஒரே மாதிரியானதுதான். இருவரும் ஒரே வாழ்க்கையை நடாத்துகிறார்கள். கிட்டத்தட்ட ஒரேமாதிரியான உணர்ச்சிகளுடையவர்களாக உள்ளார்கள். ஆனால் ஒருவருடைய தீவிர உதவியில்லாமல் மற்றொருவர் வாழமுடியாது.

பெண் சகித்துக் கொள்பவள். ஆண் ஆதிக்கம் செலுத்துபவன். அவள் வீட்டின் பொறுப்பாளி. அவன் சாப்பாடுக்கு வழி செய்து கொடுப்பவன். அவள் பரிமாறுபவள் சகல அம்சங்களிலும் அவள் காணப்படுபவள்.

முக்கியமாக கணவன் தன் மனைவியை அடிமைபோல் நடத்தலாம். தமக்குத் தோன்றும்போது அவளை அடிக்கலாம் என்ற உரிமை தமக்கு உண்டு என்ற நம்பிக்கை ஒவ்வோர் படித்த கணவர்மார்களிடமும் உள்ளது என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. மனைவியை அப்படி நடாத்துவது காட்டுமிராண்டித்தனமான செயல் என்றே கூறலாம்.

பெண்களின் கல்வியை எடுத்து நோக்கின் குடும்ப தம்பதிகளின் வெளி அலுவல்களில் ஆணுக்குத்தான் எல்லா அதிகாரங்களும். ஆகையால் அவற்றைப் பற்றி அவனுக்கு அதிக உணர்வு இருக்க வேண்டும் என்பது பொருத்தமானதே.

மாறாகக் குடும்ப வாழ்க்கை முற்றிலும் பெண்களுக்குரிய விஷயமாகும். ஏனெனில் குடும்ப விஷயங்கள், குழந்தைகளை வளர்த்தல், அவர்களுக்குக் கல்வி புகட்டுதல் போன்றவைகளில் பெண்களுக்கு அறிவை வளர்க்கும் அடிப்படைக் கொள்கைகளைக் கருத்திற் கொண்டு செயற்படல்வேண்டும்.

தாமே சம்பாதிக்க முடியாத நிலையில் சில பெற்றோர்கள் பெண்களை வைத்திருப்பது தவறு. பெண்ணின் கற்புநெறியைக் கருத்திற் கொள்வோமாயின் தூய்மையே தன்னுடைய சிறந்த கவசம் என்பதை அறிந்துள்ள பயமற்ற ஓர் பெண்ணின் கற்பை யாராலும் அழிக்கவே முடியாது.

பெண்களின் வாரிசு உரிமைகளை பற்றிய விடயத்துள் ஆண்களுக்கு இல்லாத சட்டபூர்வமான நிர்ப்பந்தம் எதுவும் பெண்ணுக்கு இருக்கக் கூடாது,

திருமணம் செய்கின்ற பருவ வயதைப் பெண்ணுக்கு மணமகனைத் தேர்ந்தெடுக்கும்போது மணமகன் தனக்குப் பிடித்தவனா இல்லையா என்பதை முடிவாகத் தீர்மானிக்கும் உரிமை பெண்களிடம் இருத்தல்வேண்டும். விதவைக் கோலம் கொண்ட பெண்களை நோக்குவோமாயின் பெண்ணைப் பெற்றுக் கொண்ட தகப்பன் தன்னுடைய பொறுப்பைக் கவனியாது வேறு வழிகளில் திரிந்து அதாவது தன் மகளைத் தள்ளாடு கிழவனுக்கு மணம் செய்து கொடுக்கும் பட்சத்தில் அவள் விதவையாகிவிட்டால் அந்தத் தகப்பன் தன்னுடைய பாவச்செயலை போக்கிக் கொள்வதற்கு மறுமணம் செய்து வைப்பது பிராயச்சித்தமாகும்.

பெண்களின் வாழ்க்கையை முற்றாகப் பாதித்துள்ள வரதட்சணைக் கொடுமையை நோக்கும்போது சீதனம் என்பது பெண்களை விலை பேசிக் கொடுப்பதைவிட வேறு எதுவுமில்லை. வரதட்சணை கொடுத்தால்தான் திருமணம் செய்துகொள்ள முடியும் என்ற நியந்தனை விதிக்கும் எந்த இளைஞனும் தான் படித்த படிப்பிற்கும் தன்னுடைய நாட்டிற்கும் அவமதிப்பைத் தேடி உண்டாக்குகின்றான். பெண் இனத்தையே அவன் அவமானப்படுத்தியவனாகின்றான்.

பெண்கள் அணியும் நகையானது அதாவது விலையுயர்ந்த ஆபரணங்களை அணிவது நாட்டுக்குப் பெரும் நஷ்டம். ஏனெனில் எந்த அளவுக்கு மூலதனம் பயன்படுத்தப்படாமல் முடக்கி வைக்கப்பட்டுவிடுகின்றது என்பதனை அவர்கள் நினைக்க வேண்டும்.

தியாகத்தின் உருவமாகப் பெண்கள் அமைந்துள்ளார்கள் என்றாலும் பெண்கள் சரியான உணர்வுடன் ஒரு காரியத்தில் இறங்கினால் பெரும் மலைகளைக் கூட அவர்களால் நகர்த்திவிட முடியும்.

# வைத்தியப் பழமொழி

இளம்பிறை கட்டக் கிளம்பிடும் தோஷம்.

அமாவாசை கழிந்த பின் திரிதிகை திதியின் நேரத்தில் மூன்றாம் பிறை தோன்றும் போது, அப்பிறையைப் பார்த்து, முன்னமேயே அப்பிறையைப் போல தங்கத்தினால் அடிக்கப்பட்டுக் கத்தரித்துக் காது பற்ற வைத்துள்ள தகட்டைக் தோஷம் பிறந்துள்ள குழந்தைகள் கழுத்தில் கட்டிவிடின் அத்தோஷம் நீங்கிவிடும்.

வீட்டுபாவனைக்குரிய நானாவித பொருட்கள் வேண்டுமா?
நாகரீக நங்கையர்க்கு அழகு சாதனங்கள் தேவையா?
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்:

புவனா
ரேடேர்ஸ்
கே. கே. எஸ் வீதி சுன்னாகம்

மணிக்கூடுகள் பழுதுபார்த்துக் கொடுப்பதற்கு
நம்பிக்கையான இடம்

தேவன்
வாச் வேக்ஸ்
பஸ் நிலைய வீதி சுன்னாகம்

குறைந்த பணத்திற்கு சிறந்த சேவை

ரேஷன்
எலக்ரிகல்ஸ்
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

உமா அச்சகம், கனகசபை அவென்யூ வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.